Regd. No. M. 4593. 'KUDI ARASU' 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை: ரூ. 0-1-0

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மலர் 18 | சனிக்கிழமை, 8-9-1945 ஆவணி-மீ 23உ | இதழ் 48

## சீதையைக் குற்றவாளியாக்கியது
# சிவனும் விஷ்ணுவும்

### 16 ஆண்டுகட்கு முன் "குடி அரசு" கூறியது

இக்கட்டுரை புதிதல்ல,
12-5-29-ந் தேதி "குடி அரசு" பத்திரிகையில் வெளியானதேயாகும்

சீதை விபசாரி என்று சுயமரியாதைக் காரர்கள் சொல்லுவதாக தோழர்கள் கலியாணசுந்தர முதலியார்களும், வடிவேல் செட்டியார்களும் சொல்லுகிறார்கள். அதனால் சனங்கள் வேசமடைந்து சுயமரியாதைக்காரர்களை வெறுத்து நான் புறத்துவார்களென அவர்கள் நினைக்கிறார்கள். சுயமரியாதைக்காரர்கள் சீதையைக்குற்றம் சொல்லவில்லை. அவர்கள் இராமாயணத்தை நடந்ததாக ஒப்புவதில்லை, அப்படியிருந்தும் விவகாரத்திற்கு ஏற்பட்ட காரணங்களைச் சொல்லுகிறேன். உங்களுடைய பெரிய அறிவினால் ஆலோசியுங்கள், சுயமரியாதைத் தொண்டர்கள் பலவிடங்களுக்குப் போவதாலும் பேசுவதாலும் தர்க்கங்கள் ஏற்பட ஏது இருப்பதாலும் அவர்களும் இதை கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

தாரை, மண்டோதரி, அகலிகை, சீதை, துரோபதை ஆகிய ஐந்துபேர்கள் பதிவிரதைகளென்று சொல்லி, அதோடு பலதடவை பழம் பொருந்த சக்கத்தையும், தாரையைச் சந்திரனாலும், அகலிகையை தேவேந்திரனாலும், கற்பிழந்தவர்களெனக் காட்டி, சீதையை இராமாயணக் கதையால் சீதையின்பேரில் சந்தேகப்படும்படியாக எழுதி அதைச் சமய புராணக்கதைகளின் மூலமாய் எழுதி வைப்பது பார்ப்பனர்கள்தான் என்றும். அது பெண்களையே அவமானப் படுத்துவதாகுமென்றும், அந்த சமயப் புராணங்களும் பெண்களைப்பற்றி எழுதியிருக்கும் கதைகளும் ஞாயமற்றதென்றும் சித்திரபுத்திரனால் "ஐந்திலே இரண்டு பழுதில்லை" என்னும் வியாசம் 'குடி அரசில்' எழுதப்பட்டிருக்கிறது. அதைத்தான் திரித்துக்கொண்டு சீதையை சுயமரியாதைக்காரர்கள் விபசாரி என்று சொல்லுகிறார்களென்று சொல்லுகிறார்கள்!

ஐந்துபேர்கள் பதிவிரதைகளென்றெழுதி அவர்களையே பின்னால் பதிவிரதா தர்மம்கெட்டு விட்டவர்களென்று கதையெழுதி விருக்கிறீர்களே எதை நம்புவது என்றால் அதொரு குற்றமா? அதை எழுதினவர்பேரிலும் அதைப் படித்துப் பண்டிதரானவர்கள் பேரிலும், அதைச்சொல்லி வயிறு வளர்க்கிறவர்கள் பேரிலும் குற்றமில்லை, ஆனால் "இந்த மதக்கதைகள்-இவைதானா" என்பது குற்றமா? இப்படிக் கேட்டவர் யாரிவர்? இவைதானா இப்பண்டிதர்கள் படித்த வேதாந்தமும், சித்தாந்தமும்?

இந்தப் பண்டிதர்கள் ஆஸ்திக சங்கமென்று புராணப் பிரசார சங்கமென்று ஏற்படுத்திக்கொண்டு அதன் பின்னாலிருந்துகொண்டு, "சுயமரியாதைக்காரர் சீதை விபசாரி என்று சொல்லுகிறார்கள், அதைக்கேட்டுக்கொண்டு நீங்களென்ன செய்யப்போகிறீர்கள்?" என்று பிரசங்கம் செய்கிறார்கள். ஆனால் இவர்களுக்கும் சீதைக்கும் சம்பந்தமில்லை. ஒருவர் அரசியல்வாதி, மற்றவர் வேதாந்தி. இவர்கள் சொல்லும் வார்த்தைகளுக்கு நமக்கு ஜனசமூகங்களுக்கு நியாயத்தை எடுத்துச்சொல்லவேண்டியிருக்கிறது. அதிலிருந்து நீங்களும் நியாயங்களைத் தெரிந்து பண்டிதர்களின் ஆராய்ச்சித் திறமையைத் தெரிந்துகொள்ளுங்கள்.

"எங்கும் வியாபித்திருக்கும் மகா விஷ்ணு, எல்லாம் நிறைந்த அந்தப் பொருளைக் காட்டுவது இலட்சுமி" என்றும் தத்துவார்த்தத்தோடு பார்த்தால் இராமாயணமுமில்லை, சீதையுமில்லை. சுயமரியாதைக்காரர்கள் சொல்லுவதாகச் சொல்லும் விபசாரி தோஷமுமில்லை. இலட்சுமியை செல்வமென்று சொல்லுவார்களே [illegible] கூடியதும்; ஆகிய லட்சுமி ஒருவனிடம் நிலைக்கமாட்டாள் என்பது எல்லோருமறிவார்கள். அந்த இலட்சுமி ஒரு சீதையாக மட்டும் பிறப்பதில்லை. உலகத்திலுள்ள பெண்களெல்லாம் இலட்சுமிகளே, அந்த இலட்சுமியின் அம்சம் சிலரிடத்தில் குறைந்தும், சிலரிடத்தில் ஏறியும் காணப்படும். ஜனகன், தசரதன், ராவணன் யாகசாலை, பூமி முதலிய இடங்களிலிருந்து சீதை பிறந்தாளென்று பலராமாயணங்கள் பலவிதமாகச் சொல்லுகின்றன.

வைகுண்டத்திலிருக்கும் விஷ்ணுவும், இலட்சுமியும் முறையே ராமர் சீதையாக இப் பூலோகத்தில் பிறந்தார்களா? என்பதற்கு வைஷ்ணவ புராணம் சொல்லும் கதையைப் பார்த்தால் சுயமரியாதைக்காரர்கள் சீதையை விபசாரியென்று சொன்னதாகச் சொல்லும் பண்டிதர்களின் புராணங்கள் உத்தரவாதமேயொழிய சுயமரியாதைக்காரர்கள் பொறுப்பாளிகளல்லர்.

ஜலந்தரனுடைய பெண்சாதி பிருந்தை அல்லது விருந்தையின்மேல் அதிக நாளாக ஆசைகொண்டிருந்தார் விஷ்ணு. ஜலந்தராசுரனை பரமசிவம் யுத்தத்தில் கொன்றார். இதனிடையில் விஷ்ணு ஜலந்தரனைப்போல் வேஷமெடுத்துப் பிருந்தையோடு சுகித்திருந்தார். பிருந்தை அந்தச் சூதைத்தெரிந்து "ஏ பாவி விஷ்ணுவே! என்னுடைய கற்பை நீ அழித்ததினால் நீ மனிதனாகப் பிறந்து உன்னுடைய பெண்ஜாதியை ராக்ஷதன் அபகரித்துக்கொண்டு போக" என்று சபித்து தான் அக்கினியில் வீழ்ந்து சாம்பலானாள். சாம்பலைக்கண்ட விஷ்ணு அந்தச் சாம்பலில் புரண்டு அழுதுகொண்டிருந்தார். அதைத்தெரிந்து பார்வதி துளசி என்னும் பெண்ணை விஷ்ணுவினிடம் அனுப்பினாள். அவளால் விஷ்ணு ஆறுதலடைந்து அவளோடு கூடியிருந்தார் (அதனால் துளசி மடமாயிற்று) என்பது சைவத்தின் முக்கிய புராணமான கந்தபுராணத்திலுள்ள கதை.

இந்தச் சைவ ஆதாரப் புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஜலந்தரன் [illegible] வேஷமெடுத்து அவனை ஜெயிக்க முடியாமல் கற்பழித்து அதற்கு [illegible]

பெண்ஜாதியின் பதிவிரதா தர்மமே காரணமென்றறிந்து தன் பெண்ஜாதியை பார்வதியை விஷ்ணுவிடத்திலனுப்பி அதைக் கெடுக்க உபாயம் செய்யச்சொன்னார். தருமத்தை நிலைநிறுத்த அவதாரம் செய்யும் மகாவிஷ்ணு சூரனுடைய ரூபத்தை யெடுத்துப் பிருந்தையுடைய பதிவிரதா தர்மத்தை அழித்தார். அதையறிந்த அந்தப் பிருந்தை விஷ்ணுவை (அவர் மனைவியின் பதிவிரதா தர்மம் கெடும்படி) கடுமையாகச் சபித்தாள் என்றிருக்கிறது.

பிருந்தையின் சாபத்தின் கருத்தென்ன? தன் பதிவிரதா தருமம் கெட்டதுபோல் விஷ்ணுவின் பெண்ஜாதியான இலட்சுமியின் பதிவிரதா தருமமும் கெடவேண்டுமென்பதுதானே? மும்மூர்த்திகளையும் பதிவிரதா தருமம் குழந்தைகளாக்கிவிட்டதென்று நாம் ஒத்துக்கொண்டோம். பிருந்தையின் பதிவிரதா தர்மத்தால் விஷ்ணு மனிதனாகப் பிறந்ததும் இலட்சுமி சீதையாகப் பிறந்ததும் கேட்டோம். ராவணன் சீதையை எடுத்துக்கொண்டுபோனதும் ராமர் துக்கப்பட்டதும் படித்தோம். பிருந்தையின் சாபம் இவ்வளவு தானா நின்றுவிட்டதா? அதற்கு மேலும் சென்றதா? என்பதைப் பற்றி நாங்கள் ஏன் யோசிக்கவேண்டும். சுயமரியாதைக்காரர் கந்தபுராணத்தை எழுதிய கலியாணசுந்தர முதலியார் கையில் கொடுக்கவில்லை. ராமர் தமது சீதை காட்டிற்குப்போனதும் சந்தேகிக்கவில்லையானால் மனைவிக்காக குமாரர்தவர் ஆகுமோ விரோதம். தைதேவர் வள்ளுவப் பெரியார், கற்பின் இலட்சணத்திற்கு சான்றாகச் சீதையை நிலைத்ததும் (மாரியைக் கொண்டதும்) காவிய மணிமேகலைக்குக் குற்றம், மாரீசப்படலத்தில் இலக்குவனைச் சீதை கடுமையாகச் சொன்னது எந்த நல்ல பெண்களுக்கும் விரோதம். ராமனுடைய மனைவி அனுமான் சீதையைப் பற்றிச் சந்தேகப்பட்டதை அப்படியென்று சொன்னால் ராமனுக்குக் குற்றம். சீதையை அனுமான் தன் தோளில் ஏற்றுக்கொண்டு செல்லும் அக்கினியின் தன்மையை சூரியன் கற்றுக்கொடுக்காது அனுமானின் குருவான சூரியனுடைய குற்றம், கலைந்த கலையும் வேதக்கடலுமான இவன் அனுமான் என்று ராமரே சொல்லியிருக்கையில், அனுமான் நினைத்ததும் சொன்னதும் அனுமான் குற்றமா அல்லது ராமர் குற்றமோ? அல்லது நடந்ததா? சித்திரபுத்திரன் மேல் குற்றம் சொல்ல புராணத்திலிடமில்லை, சீதையை ராவணன் தலையையும் மயிரையும் பிடித்துத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டு போனான் என்றும் அக்கையின் இறங்கிவிட்டதும் சீதை மோகம் உற்று இருந்தாள் என்றும் வால்மீகி ராமாயணம் சொல்லுவதை முன்னமே பிரமா சொல்லியிருப்பதாலும், சடாயுவின் தம்பி சம்பாதி அனுமானிடம் சொன்னதாலும் அந்தரங்கம் அனுமானுக்குத் தெரியுமே. வல்லாமல் பன்னசாலையோடு பேர்த்துப் போனதாக ஸ்ரீரங்கம் அய்யங்கார்களுக்காக எழுதின கம்பராமாயணம் அந்தக் காலத்தில் அனுமானுக்குத் தெரியாது. இன்னும் பல புராணக் கதைகளும் வண்ணான் பேச்சைக் கேட்டு சீதையைக் காட்டிற்கு அனுப்பின கதை வரையிலும் இங்கு எழுத இடமுமில்லை. அஷ்டமா சித்திகளுமடைந்து திரிகாலமும் உணரும் சக்தி வந்து கல்வாது கலையும் வேதக்கடலுமான அனுமார் கொண்ட சந்தேகத்தில் சுயமரியாதைக்காரர் ஐயங்கொண்டதில் ஒரு ஆச்சரியமுமில்லை.

இதையே ஆதாரமாகக் கொண்டு சுயமரியாதைக்காரர்கள் மேல் பழி போட்டு அதுவே ஆஸ்திகச் சங்கத்திற்கு ஆதாரமென்று நினைக்கிறார்களா அல்லது கந்தபுராணத்தைத் தள்ளுகிறார்களா? ஆனந்த ராமாயணத்தை எங்கு ஒளிப்பது? வால்மீகிராமாயணத்தையும் கம்பராமாயணத்தையும் குற்றம் சொன்னாலும் ஏற்பாட்டிற்கு விரோதமில்லையே! தர்மம் கெட்டு அதர்மம் தலையெடுத்தால் நான் ஒவ்வொரு யுகத்திலும் பிறக்கிறேன் என்று பகவான் சொல்லியிருக்கிறார் என்பதை எல்லாரும் சொல்லுகிறார்கள். ராமர் பிறந்தார், அவர் வேலை தீர்ந்தது; கிருஷ்ணன் பிறந்தார், அவர் வேலையும் முடிந்தது. அதற்குப் பின் விஷ்ணு பத்தாவது அவதாரம் பண்ணினரா; அவரும் ராமாயணம் எழுதியிருக்கிறார். அந்த ராமாயணமல்லவோ பிரமாணமாக வேண்டும். பழைய அந்தக்காலம் நமக்கு விசேடமாகவிருந்தாலும், அந்தக் காலத்தில் இப்பொழுதுள்ள ஏதுமில்லையே, நமது தரும சாஸ்திரங்களும், விதிகளும், சம்பிரதாயங்களும் உண்டான காலம் எப்பொழுதோ போய்விட்டது. பூமியானது பலவித மாறுதல்களை அடைந்துவிட்டது. ஆத்ம வழி தப்பியவர்கள் உலகத்தில் தங்களிஷ்டம்போலிருந்துகொண்டு முன்காலத்தவர்களுக்கு எழுதப்பட்ட வழக்கத்திலில்லாத பாஷையின் மூலமாகக் கிடைப்பதெல்லாம் தெய்வீகமானதென்றும், சுதந்திர எண்ணங்கள் குற்றமாகக் கருதப்படவேண்டுமென்றும், அடிமைத்தனத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றுமா கடவுள் சொல்லும் ஆஸ்திகமாகவிருக்கும்? சற்று ஆலோசித்துப் பாருங்கள். அந்தக் காலத்திலா நாம் வசிக்கிறோம்? நீராவி யந்திரங்களும், நீராவிக் கப்பல்களும், நூதன சாஸ்திரங்களுடனும், வேலையாளருடனும், ஐரோப்பா அமெரிக்கா முதலிய தேசங்களுடனும் சேர்ந்து இந்த இருபதாம் நூற்றாண்டின் இடத்திலல்லவா வசிக்கிறோம்? இவர்களுடன் போட்டிக்கும், இவர்கள் சரிசமமாக நம்மைக் கருதவும் பழய ராமனும் சீதையும் உபயோகமில்லை என்றால் என்ன குற்றம்? இதை மெய்ப்பிக்க சென்னைக்குப் போனமைக்கும் உங்களுடைய நித்ய லௌகிக வாழ்க்கையுமே உங்களுக்கு எடுத்துச் சொல்லவில்லையா?

உண்மை சமயப்பற்றுடையவர்களாய் ஆசார சீர்திருத்தம் அவசியம் வேண்டுமென்று நினைப்பவர்களும், உலகப் போக்கைப் பொது அறிவால் நினைத்து நேர்நடையையுடைய சைவர்களும் வணிகர்களுமிருக்கிறார்கள் என்று நினைத்துப் புராணக் கதைகளைச் சுருக்கிவிட்டேன். நமது நாட்டில் நடக்கும் சில சங்கதிகள் அவர்களுக்குத் தெரிந்திருந்தாலும் அதை இன்னொரு தரம் அவர்களுக்குச் சொல்லுகிறேன்.

சமர் பத்திராதிபராக தோழர் கலியாணசுந்தர முதலியார் பிராமணரல்லாதவர்களுக்கு இடையூறாக நின்று ஜஸ்டிஸ் கட்சியைக் குற்றம்சொல்லவே 'ஹோம் ரூல்' என்று ஒன்று ஏற்படுத்தி அதற்குத் தகுந்த பத்திரிகையும் அவரிடம் கொடுக்கப்பட்டது. அதனால் அவர் பத்திரிகைப் பண்டிதருமானார். சமயம் வரும்போதெல்லாம் பார்ப்பனர்களிடம் சேர்ந்து கொண்டு எலக்ஷன் வரும்போதெல்லாம் ஜஸ்டிஸ் கட்சியைக் குற்றம் சொல்லும் வேலையையே ஏற்றுக்கொள்ளுகிறார். சுயமரியாதைக்காரர்கள் புராண சாஸ்திரங்களைக் குற்றஞ்சொன்னால் அவர்களுக்குச் சமாதானம் சொல்ல வேண்டுமேயல்லாமல் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களுக்கு ஓட்டுக்கொடுக்காதீர்கள் என்று ஏன் சொல்லவேண்டும்? அய்யங்கார் ஆட்களுக்கு தாம் பின்னாலிருந்துகொண்டு அவர்களைத் தூண்டிவிட்டும் தம் கூட்டத்தாருக்கு வலது கையாலே மதப்பிரசாரம் செய்வது போல நடித்து அவர்களை இடது கையாலே கொள்ளையடிக்கப் பார்ப்பானுடன் சேர்ந்து தம் ஆசையையும் பெருமையையும், தந்திரத்தையும், சுயமரியாதைக்காரர்களின் பேரில் போட்டு பழிபாவம் எடுத்துக் கொண்டு மனிதனுடைய சமாதானத்திலும் பொது சகோதரத்தன்மையிலும் தமக்கு நல்லெண்ணமிருப்பது போல சாதுத்தன்மையாகப் பேசியும் வருகிறார். ஆனால் உங்கள் சமயத்தைக் காப்பாற்ற வந்துவிட்டார் என்று மட்டும் நினைத்துக் கவலையற்று இருந்துவிடாதீர்கள். உங்கள் வாழ்விற்கு உறுதியாகிய உண்மையை நீங்கள் முழுதும் உணர்ந்து கொள்ள வேண்டிய காலம் வந்து விட்டது. பாக்கியாக இருக்கும்போது உங்களுக்கு விபத்து வாராமல் தடுக்கும்படி முற்காலம் நீங்கள் சனிடம் விட்டிருந்தீர்கள். தற்காலத்தைப் பற்றி நீங்களே சரியான தீர்மானம்

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

# திருச்சிக்கு வாருங்கள்!

திராவிடர் இன எழுச்சியைத் தூண்ட
எதிர்கால வாழ்வைச் சித்தரிக்க
செப்டம்பர் 29, 30 தேதிகளில், திருச்சி புத்தூர் மைதானத்தில்
நடைபெறப்போகும்
17-வது மாகாண திராவிடர்கழக—4-வது மாகாண சுயமரியாதை

# மாநாடுகளில்

## பங்கு கொள்ளுங்கள்.

★

50-ஆயிரம் மக்கள் குழுமியிருக்க பந்தல், ஒலிபெருக்கி,
மின்சார விளக்குகள், பல தலைவர்களின் படங்கள்
கூடிய அலங்காரம், மாபெரும் ஊர்வலம்,
சேலம் மாநாட்டில் வெற்றிகண்ட
'பெரியார் தொண்டர்படை' அணிவகுப்பு வேலைகள்
துரிதமாக நடைபெறுகின்றன.

வெளியூர் பிரதிநிதிகட்கு உணவு வசதிகள், உணவு விடுதிகள் மூலம்
ஏற்பாடாகி விட்டன. மாநாடுகளில் பெண்கட்குத் தனியிடமுண்டு.

இரண்டு நாட்கட்கும் பிரதிநிதிகட்டணம் ரூ. 1. பார்வையாளர்கட்டணம் அணா 8.

---

## தன்மதிப்பு தழைத்துவிட்டது

"கார்டியன்" என்ற ஆங்கில வாரப் பத்திரிகையிலே, வடநாடு சென்று நீண்டகாலத்துக்குப் பின்னர் தமிழ்நாடு திரும்பிய ரெவரண்ட் சகாயம் என்ற கிறித்துவப் பாதிரியார் இங்குள்ள புதுமலர்ச்சி கண்டு உள்ளம் பூரித்து எழுதிய கட்டுரையொன்றின் மொழிபெயர்ப்பு:-

"தாழ்த்தப்பட்டுக் கிடந்த மக்களிடையே இப்போது தன்மதிப்பு வளர்ந்திருக்கிறது. சுயமரியாதை என்ற பெயருடனேயே ஒரு இயக்கம் தென்னாட்டில் வேலை செய்து வெற்றிபெற்றுள்ளது. இன்று 'தீண்டாதார்' அடங்கிக் கிடக்கும் மக்களாக இல்லை. உயர் ஜாதிக்காரர் என்பவர்களின் தர்மகர்த்தாத்தனத்தை அவர்கள் பொறுத்துக் கொள்ள மறுக்கிறார்கள். ஆதித்திராவிட மக்களிலே பலர் பட்டாளத்திலே சேர்ந்து, மற்றவர்களோடு சமமாக உண்டு வாழ்ந்ததால், இரா மக்களிலே சமுதாயக்கோடான பழைய வழக்கங்களால் தங்கள் குல மக்கள் பிணைக்கப்பட்டிருப்பது கண்டு பதறுகிறார்கள். இந்த மார்க்கம் புரட்சிகரமான மாறுதல் அடைந்தாலொழிய, அந்த மார்க்கம் உள்ள வரையில், தீண்டாமை இருந்துதான் தீரும். ஆனால் இப்போது அதன் விஷப்பல் கழற்றப்பட்டு விட்டது. சிறிய நகர்களில் கூட, பார்ப்பனருக்கு வேறு இடம் பார்ப்பனரல்லாதாருக்கு வேறு இடம் என்று காப்பி ஓட்டல்களில் இருந்துவந்த வித்தியாசம் மறைந்துவிட்டது. ஒரு குலத்தாரைச் "சாமி" என்று மற்றக் குலத்தார் கூப்பிடும் வழக்கம் மறைந்து வருகிறது. பல்வேறு காரணங்களுக்காக, பெயர்களுடன் சேர்க்கப்படும் ஜாதிப் பட்டங்களை, இப்போது நீக்கிக்கொண்டு வருகிறார்கள். ஒருநாள் ரயில் வண்டியிலே, கூட்டமாக ஏறினார்கள், அப்போது "மேலான வகுப்பு" எனப்படும் வகுப்பினர் ஒருவர் கூட்டத்தைக் கண்டித்தார். 'இங்கேயும் நீ இருக்கிறாயா? உத்யோகப் பீடங்களிலே தான் உங்கள் கும்பல் ஆட்சி செய்கிறது என்று பார்த்தோம். உங்க பருப்பு வேகிற காலம் அல்ல இது!' என்று ரயிலிலே ஏறின குப்பலிலே ஒருவர் கூறினார், அந்த மேல்ஜாதிக்காரனைப் பார்த்து."

('திராவிடநாடு')

## தூத்துக்குடியில் பெரியார்

தூத்துக்குடிக்கு வரும்படி சர் ஏ. டி. பன்னீர்செல்வம் சங்கத்தாரின் அழைப்புக்கிணங்கி பெரியாரவர்கள், தோழர்கள் ஏ. பி. ஜனார்த்தனம், அ. மணி ஆகியவர்களுடன் 28-ந் தேதி பிற்பகல் 1½ மணிக்கு தூத்துக்குடி எக்ஸ்பிரசில் வந்து சேர்ந்தார். இரயிலடியில் ஏராளமான பிரமுகர்களும், தொழிலாளர்களும் மாலையிட்டு, வாழ்த்தொலிகளுடன் வரவேற்றனர். பிறகு பெரியாரவர்களையும், மற்ற தோழர்களையும் மோட்டார் காரில் ஊர்வலமாக, பாண்டுவாத்தியத்துடனும், வாழ்த்தொலிகளுடனும், முக்கிய தெருக்கள் வழியாக ஆண்டு விழாப் பந்தலுக்கு அழைத்துச் சென்றனர். வழி நெடுகப் பல இடங்களில் மாலையிட்டு மரியாதை செய்தனர்.

பழயகோட்டை பட்டக்காரர் மறைவு தந்தி வாயிலாகப் பெரியாரவர்களுக்குக் கிடைத்து, மிக வருந்தினார். அனுதாபத் தந்தி யடிக்கப்பட்டது.

சரியாக மாலை 4 மணிக்குப் பெரிய அலங்காரப் பந்தலில் பன்னீர் செல்வம் சங்க ஆண்டு விழா தொடங்கப்பட்டது. இயக்கப் பாடல்கள் பாடப்பட்டன. பிறகு சௌந்தரபாண்டியன் சங்கச் சார்பாகச் சிறுமிகளால் கோலாட்டம் நடைபெற்றது.

விழாவுக்குத் தலைமை தாங்குமாறு கோவில்பட்டி பஞ்சாயத்து போர்டு தலைவர் தோழர் ஈ. வி. எ. வள்ளிமுத்து அவர்களைத் தோழர் பி. எஸ். சண்முகம் கேட்டுக்கொண்டதைத் தோழர் பி. ஏ. டி. ஆறுமுகப் பெருமாள் ஆதரித்தார்.

தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர் பலவேசம் கொடியேற்றினார். தோழர் ஆறுமுகப் பெருமாள் வரவேற்றுப் பேசினார். சங்கக் காரியதரிசி தோழர் ஏ. எஸ். இராசன் அவர்களால் ஆண்டு அறிக்கை வாசிக்கப்பட்டது. பிறகு 8 வயது சிறுமி நீலாவதி அவர்கள் 'கல்வி' என்னும் பொருள் பற்றி அழகாகப் பேசினார். பிறகு தோழர் ஏ. பி. ஜனார்த்தனம் அவர்கள் 'சுயமரியாதை இயக்கமும், தொழிலாளர்களும்' என்பது பற்றிப் பேசினார்.

பெரியாரவர்களுக்கு ஈ. த. வெள்ளையார் வாசகசாலை சார்பாக வரவேற்பு வாழ்த்துப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. பிறகு மாலை அணிவிக்கப்பட்டது பலத்த கைதட்டலுக்கிடையே சுமார் நான்கு மணி நேரம் பெரியாரவர்கள் கடவுள், சமுதாயம், காங்கிரஸ், பொதுவுடைமை, திராவிடர் நிலை, அடுத்த கிளர்ச்சி ஆகியவற்றைப் பற்றிச் சொற்பொழிவாற்றினார்.

தலைவர் முடிவுரைக்குப் பிறகு பழயகோட்டைப் பட்டக்காரர் மறைவு குறித்த அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சிறுமிகள் கோலாட்டத்துடன் ஆண்டு விழா முடிவுற்றது.

விசுவநாதம் வாலிபர் சங்கத்தார் பெரியாரவர்களுக்கு மாலை அணிவித்தனர்.

ஆண்டுவிழாவுக்கு சுமார் 10,000 தோழர்கள் வந்திருந்தார்கள்.

இடையில் வந்த மழையையும் பொருட்படுத்தாமல் மக்கள் ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டிருந்தனர். பெண்களும் பெருவாரியாக வந்திருந்தனர்.

மறுநாள் காலை தோழர் வி. வி. தனுஷ்கோடி நாடார் பெரியாரவர்கள் ஜாகைக்கு வந்து சென்றார். 10-40 மணி வண்டியில் பெரியாரவர்களும் தோழர்களும் ஈரோட்டுக்குப் புறப்பட்டனர். பெருவாரியான தோழர்கள் இரயிலடிக்கு வந்து வழியனுப்பினர்.

இடையில் ஸ்டேஷன்களில் ஆங்காங்குள்ள தோழர்கள் வந்து பெரியாரவர்களுடன் பேசிவிட்டுச் சென்றனர். புலவன் வண்டி மதுரை வரவே 'பெரியார் வாழ்க' என்ற முழக்கம் வானைப் பிளந்தது. ஏராளமான தோழர்கள் வந்திருந்தனர்.

தோழர் எம். ஆர். இராதா, பாவலர் பாலசுந்தரம் ஆகியோரது வேண்டுகோளின்படி பெரியாரவர்கள் இரவு மதுரையில் தங்குவதற்கு ஒப்புக்கொண்டார்.

தோழர் ஏ. பி. ஜனார்த்தனம் அவர்கள் தூத்துக்குடி வடக்குத்தெருவில்

## சேலம் திராவிட மாணவர் கழகம்

சேலம் சுயமரியாதைச் சங்கக் கட்டிடத்தில் 22-8-45 மாலை தோழர் துரைசாமி தலைமையில் நடைபெற்ற திராவிட மாணவர் கழகத் தேர்தலில் தோழர்கள் வை. திருநாவுக்கரசு தலைவர், ஜி. எச். கோதண்டராமன் துணைத்தலைவர், பெ. சோமசுந்தரம் பொதுச் செயலாளர், வ. செ. குழந்தைசாமி, கூ. ஜி. தியாகராஜன் துணைச்செயலாளர்கள், பெரியசாமி அமைப்புச் செயலாளர், மற்றும் 5 பேர் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர் என்று தெரிந்தெடுக்கப்பட்டனர்.

## காங்கரஸ் தேய்கிறது

பஞ்சாப் காங்கரஸ் கமிட்டியின் மாஜி தலைவரான தோழர் மாலிக் லால் கான் என்பவர் "முஸ்லிமாக இருப்பவர்கள் முஸ்லிம் லீகை பலப்படுத்தக் கடமைப் பட்டவர்கள். ஆகவே நானும் லீகில் சேருகிறேன்" என்று கூறி லீகில் சேர்ந்துவிட்டார்.

பஞ்சாப் மாகாண காங்கரஸ் கமிட்டித் தலைவரான தோழர் மெய்ன் இப்டிகாருதீன் என்பவர் தன் பதவியை ராஜீனாமாச் செய்துவிட்டார் என்று தெரிகிறது. இவரும் லீகில் சேருவாரா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

---

28ந்தேதி இரவு 11மணிக்கு தோழர் ஈ. வி. எ. வள்ளிமுத்து அவர்கள் தலைமையில் பெரியார் சமதர்ம வாசகசாலையைத் திறந்துவைத்தார்.


தமிழ் நாட்டின் தலைமகன் புரட்சி கவிஞர் பாரதிதாசன் நிதிக்கு உதவுங்கள்

இராசிபுரத்தில் 15, 16-9-45 சனி, ஞாயிறுகளில்

ஓரியண்டல் தியேட்டரில்.

தோழர் C. N. அண்ணாதுரை M. A. அவர்கள் தலைமையில்
கவிஞர் பாரதிதாசன் அவர்கள் முன்னிலையில்

சலகண்டாபுரம் பகுத்தறிவு நடிகர் கழகத்தாரின்

வீரவாலி

என்னும் நாடகம் கவிஞர் நிதிக்காக நடைபெறும்.

வால்மீகி இராமாயணத்தையும், நம் நாட்டு வரலாற்றையும், அறிஞர்கள் கருத்தையும் ஆய்ந்து எழுதப்பட்ட வீரரசம் ததும்பும் புது நாடகம்! தகுதி வாய்ந்த நடிகர்கள் நடித்துக் காட்டும் தமிழ் வாழ்வின் வீர விளக்கம்! நாடகம் காண ஆவலுள்ள அன்பர்கள் வருக!

கதை, வசனம், பாட்டு:- ப. கண்ணன்

கட்டணம்:-5 0-0; 3-0-0, 2-0-0, 1-0-0, 0-8-0.

கே. ஏ. வி. அர்த்தனாரி, பி. எஸ். இராமதாஸ், செயலாளர்கள்.

ஜி. பி. சோமசுந்தரம், பி. கே. கிருஷ்ணசாமி, தலைவர்கள்.

## இவ்வார நிகழ்ச்சிகள்

சேலம் திராவிட மாணவர் கழகத் தொடக்க விழா 10-9-45 காலை 10 மணிக்கு தேவாங்கப் பாடசாலையில் டாக்டர் எஸ். ஆர். ரஜாராம் எம். பி., பி. எஸ்., தலைமையில் நடைபெறும். பெரியார் ஈ. வெ. ராமசாமி சொற்பொழிவாற்றுவார்.

காரைக்கால் திராவிடர் கழகத் திறப்புவிழா தளபதி சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் 16-9-45ல் நடைபெறும். தோழர் ஈ. வெ. கி. சம்பத் திறந்து வைப்பார். தோழர் ஏ. பி. ஜனார்த்தனம் கொடியேற்றுவார். மற்றும் கவிஞர் பாரதிதாசன், ஆ. திராவிடமணி, மு. கருணாநிதி, காஞ்சி கலியாணசுந்தரம், வீரமணி, ஆக்கூர் அஜீஸ், வடகரை பக்கர் ஆகியோர் கலந்துகொள்வர்.

ராசிபுரம் தாலுக்கா சுயமரியாதை மாநாடு 9-9-45 காலை முதல் ராசிபுரம் பாலசுப்ரமணிய தியேட்டரில் நடைபெறும். பெரியார், தளபதி, தோழர்கள் வேதாசலம், ஜனார்த்தனம் ஆகியோர் கலந்துகொள்வர்.

தஞ்சை கீழவாசல் தோழர் வெ. ஜம்புலிங்கம் அவர்கள் மகள் இராஜாமணி அம்மைக்கும், கல்லூரணி ஜம்புலிங்க நாடார் மகன் பாக்கியசாமி என்கிற மயிலேறி நாடாருக்கும் 9-9-44 காலை கல்லூரணியில் திருமணம் நிகழும். இதன் அறிகுறியாகக் "குடி அரசு"க்கு ரூ. 2 நன்கொடை அனுப்பப்பட்டது.

கோவைத் தோழர் எஸ். காஸிம் அவர்கட்கு 13-9-45 காலை தோழர் யூசுப்சேட் சாகிபு தலைமையில் திருமணம் நடைபெறும். தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், டி. வி. நாராயணசாமி, பி. கே. பாபு சாகிப், ரஹிமான், யூசுப் மரைக்காயர் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். சேலம் பாய் ஜானின் இன்னிசை நடைபெறும்.

மதுரை நாடார் மகாஜன சங்கத்தின் கவுன்சில் மீட்டிங் 9-9-45லும், ஜெனரல்பாடி மீட்டிங் 16-9-45லும் கீழமாசிவீதி மொட்டைப் பிள்ளையார் கோயிலில் நடைபெறும். உறுப்பினர் யாவரும் வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கோலார் தங்கவயல் தென்னிந்திய பௌத்தர் சங்கச் சார்பில் வளத்துறைச் சேர்ந்த சுற்று வட்டாரங்களில் பிரசாரம் செய்து மாநாடு நடத்த தோழர்கள் பண்டித அப்பாதுரையார், மாரிக்குப்பம் சங்கரசாமியார், வி. கே. ஆறுமுகம், ஜெ. சி. ஆதிமூலம் ஆகியோர் சுற்றுப்பிரயாணம் செய்வர். ஷெ சமூக மக்கள் ஒத்துழைத்து உதவுமாறும், கூட்டம் நடத்த விரும்புவோர் அடியிற்கண்ட முகவரிக்கு எழுதுமாறும் கோரப்படுகிறது.

பி. குப்புசாமி, பௌத்த சங்கச் செயலாளர், சாம்பியன் ரீப், கோலார் தங்கவயல்.

சென்னிமலை திராவிடர் கழகத்தின் சார்பில் 12-9-45 மாலை தோழர் எஸ். ஆர். சுப்ரமணியம் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் ஏ. பி. ஜனார்த்தனம், ஈ. வெ. கி. சம்பத், என். நவமணி ராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

திருச்சிஜில்லா விஸ்வகுலத் தொழிலாளர் முதல் மாநாடு 16-9-45ல் திருச்சி முனிசிபல் பப்ளிக் ஹாலில் தோழர் சி. ஷண்முக ஆச்சாரி பி. ஏ., தலைமையில் நடைபெறும். தோழர் சொக்கலிங்க பத்தர் மாநாட்டைத் திறந்துவைப்பார். தோழர் நாகராஜ பத்தர் பி. ஏ. பி. எல்., கொடியேற்றுவார்.

மதுரை திராவிடர்கழக நிர்வாகக் கமிட்டிக்கூட்டம் 16-9-45 பகல் 11 மணிக்கு லெட்சுமிபுரம் குறுக்குச்சந்து தோழர் வ. இ. சுக்குனி அவர்கள் வீட்டு மேல்மாடியில் நடைபெறும். எல்லா அங்கத்தினர்களும் திருச்சி மாநாட்டு டிக்கட்டுகள் விற்பனைசெய்வதற்கு பெற்றுக்கொண்ட தோழர்களும் பணத்துடன்வரும்படி சி. முத்திருளாண்டி கேட்டுக்கொள்ளுறார்.

—

## பார்ப்பனரல்லாத வக்கீல் சங்கம் சென்னை

கீழ்க்கண்ட தீர்மானம் 15-8-45 அன்று நிறைவேறியது:-

"ஹைகோர்ட் ஜட்ஜான தோழர் ஜஸ்டிஸ் சந்திரசேகர ஐயர் அவர்கள், வைசிராய் கவுன்சிலில் டாக்டர் அம்பேத்காரை நியமித்தது பற்றியும், கல்லூரிகளில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவப்படி மாணவர்களைச் சேர்ப்பது பற்றியும் குறைவாகப் பேசியது கண்டு இச்சங்கம் வருந்துகிறது.

இம்மாதிரியான பேச்சுக்கள் அவரது உயர்ந்த உத்தியோகத்திற்கு முரணானவையாகும்."

தோழர் சீதாதேவி பார்-அட்-லா ஷெ சங்கத்தில் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.


மே. நா. கவர்னரின்
யுத்த நிதி

பிரிட்டிஷ் ஜனநாயக நாடுகள்
(காமன் வெல்த்)
வெற்றியடைய உதவியதற்காக
பெருமையடைகிறது.

★

ஆனால்

துருப்புகளின் சௌகரியங்களுக்கு
இன்னும் பொருளுதவி மிக மிகத் தேவையாகிறது.

குடி அரசு

1945-ஞு செப்டம்பர் 8-உ

# நெருங்கிவிட்டன திருச்சி மாநாடுகள்

திருச்சி மாநாடுகள் நடக்க இனி 20 நாட்களே இருக்கின்றன. பெரிய திட்டங்களின்மீது மாநாடுகள் துவக்கப்பட்டிருக்கின்றன.

எதிர்பார்ப்பதெல்லாம் ஏராளமாகப் பிரதிநிதிகள் வேண்டும்.

ஜஸ்டிஸ் கட்சிக்கு (திராவிடர் கழகத்து) இதுவரை சேர்த்த அங்கத்தினர்கள் கையெழுத்துப்போட்டவர்கள் 35,000. கையெழுத்துப் போடாத அங்கத்தினர்கள் பல லட்சம் இருக்கும் என்றும் ஆதரவாளர்கள் அபிமானிகள் கோடிக்கணக்கில் இருக்கும் என்றும் கருதுகிறோம். பின்கண்டவர்கள் அவ்வளவு இல்லாவிட்டாலும் அவ்வளவுபேர்கள் ஆதரவாளர்களாயும் அபிமானிகளாகவும் ஆகித்தீர வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

தலைவர்கள் அதிகம் பேர்களாக இருக்க முடியாது. செயலாளர்களும், முன் அணித்தொண்டர்களும் ஏராளமாக இருக்க முடியாது. ஏனெனில் ஜஸ்டிஸ் கட்சி (திராவிடர் கழகம்) இன்று லாபமடையும் தன்மையில் இல்லை, ஆதாயம் பதவி, பெருமை, செல்வம், புகழ் ஆகியவை பெறும் நிலையில் இல்லை. ஆதலால் உலக வாழ்வில் லௌகீகத்தில் கலந்துள்ளவர்கள் இதன் முதல் வரிசைக்கோ, முன்னணிக்கோ, பட்டம் பதவிகளோ வருவது சுலப சாத்தியமான காரியமல்ல.

லௌகீகப் (போட்டி) வாழ்க்கை விட்டவர்களும், வெறுத்தவர்களும், அதனை முட்டும் பிடிவாதம் கொண்டவர்களும், பொதுநலத் தொண்டில் இறங்கிப் பழகிவிட்டதால் திருத்தமுடியாதவர்களும் தான் துன்பம், தொல்லை, நஷ்டம், வாழ்வு பெருக்கத் தடை ஆகியவைகளை லட்சியம் செய்யாமல் இன்றைய நம் கட்சி, இயக்கங்களில் கலந்துகொள்ள முடியும்.

உதாரணமாகத் தோழர்கள் நேரு, பிரசாத், படேல், ராஜகோபாலாச்சாரியார் போன்றவர்கள் குடும்ப வாழ்க்கைத் துறந்தவர்களும், விட்டவர்களும் ஆவார்கள். அதனால் அவர்கள் தலைவர்களாகவும், முன்னணியிலேயே இருப்பவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் இடத்தில் உள்ள அர்த்தமற்றதிரியான காரியத்தின் நம்பிக்கையும், மதிப்பும் வைத்தவர்களே கொள்கைகளைக்கூட கவனிக்காமல் அவர்களுக்குப் பக்கபலமாக இருக்கிறார்கள்.

எனவே அப்படிப்பட்டவர்கள் நம்மில் யாராவது இருந்தால் அவர்களும், சரியாகவோ தப்பாகவோ அவர்களிடம் முழு நம்பிக்கை வைத்து அவர்களைப் பின்பற்றுகிறவர்களும்தான் முழுமே முன்னணியாளராக இருக்கமுடியும். ஆகவே அப்படிப்பட்டவர்கள் நமக்கு அதிகம் இல்லை என்பது ஒருபுறமிருந்தாலும் காரியம் நடப்பது எவ்வகையிலும் குந்தகப்பட்டுவிடாத அளவுக்கு ஆதரவாளர்களும் அனுதாபிகளும் நம் கட்சிக்கு-இயக்கத்திற்கு இல்லையென்று சொல்லிவிட முடியாது. ஆதலால் ஆங்காங்கு குறைந்தது தமிழ்நாடு 10 ஜில்லாக்களிலும் உள்ள ஆதரவாளர்கள் அபிமானிகள் ஆகியவர்கள் தங்களுக்குக் கட்சிக்கொள்கைகளில், திட்டங்களில் உள்ள நம்பிக்கையை, தலைவர் செயலாளர்கள் இடம் இருக்கும் நம்பிக்கையை, இந்த இயக்கத்திற்குத் தாங்கள் செய்யவேண்டிய கடமைக்குத் தூண்டுகோலாகக்கொண்டு மாநாட்டுக்கு ஆங்காங்குள்ளவர்கள் மக்களைத் திரட்டிக்கொண்டு "மாமாங்கம்" போல் வந்து குவிய வேண்டும். மாநாட்டு நடப்புக்கும் தங்களாலானதை வசூலித்து அனுப்பவேண்டும்.

நமக்கும் பண்டாரசன்னதிகள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், பட்டம் பதவிதாரர்கள், செல்வவான்கள், முதலாளிகள், மிராசுதாரர்கள், அதிகாரிகள், அரசாங்கத்தார் ஆகியவர்கள் ஆதரவு இல்லை. மறைமுக எதிர்ப்பும் உண்டு. நாம் பத்திரிகைக்காரர்களின் சதிக்கும், கொடுமைக்கும், வஞ்சகத்திற்கும் ஆளானவர்கள். வலிமை பொருந்திய பார்ப்பனர்களுக்கு நாம் அழிக்கப்படவேண்டியவர்கள். பதினாயிரக்கணக்கான, லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான பணம் பொதுமக்களிடமிருந்து வருவதாயாகக் கொண்டவர்களும் அல்ல. ஆதலால் நமக்கு மக்கள் எண்ணிக்கை, அவர்களது ஆதரவு, அபிமானக் குறிப்பு ஆகியவைகள்தான் "சர்வ நோய் நிவாரண சஞ்சீவியாக" இருக்கிறது.

கண்டிப்பாக ஆண், பெண், குழந்தைகள் உட்பட அபிமானமுள்ள ஒவ்வொரு வீட்டாரும் வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

மாநாட்டுக்கு வருபவர்கள் காட்டும் உற்சாகமும், கொடுக்கும் நம்பிக்கையும், நடந்துகொள்ளும் கட்டுப்பாடும்தான் மாநாட்டின் பிற்கால வேலைக்கும், பெரும் வெற்றிக்கும், தலைவர்கள் தைரியத்துக்கும் அஸ்திவாரமாகும்.

தாய்மார்கள் அதிகம் பேர் காணப்படவேண்டும். ஒரு குடும்பத்தில் இரண்டு பேர்களும் வர சௌகரியமில்லையானால் பெண்கள் மாத்திரம் வரட்டும்.

பெண் தொண்டர்கள் பலர் மாநாட்டுக்குத் தேவை இருப்பதால் பல பெண்கள் உடனே தங்களைத் தொண்டர்களாகப் பதிவு செய்துகொள்ள எழுத வேண்டும். வேண்டிய உடன் வரத் தயாராய் இருக்கவேண்டும். முன் தெரிவித்தபடி மாநாட்டுக்குப் பணி ஆற்ற விருப்பம் இருந்து சௌகரியமும் உள்ளவர்களாயிருந்தால் அவர்கள் தங்கள் விலாசம், தகுதி, வயது முதலியவற்றைத் தயவு செய்து உடனே எழுதிக்கொள்ளவும் வேண்டும். நாள் அதிகமில்லை. ஆதலால் ஆங்காங்கு டெலிகேட்டுகளையும் சேர்த்துப் பணம் வாங்கிச் செயலாளருக்கு அனுப்பினால் உடனே டிக்கட்டுகள் அனுப்பிக் கொடுப்பார்கள்.

டிக்கட் வரட்டும் என்று காத்திருக்காமல் டெலிகேட்டுகள் சேர்த்துப் பணம், பெயர் அனுப்பிக் கொடுக்க வேண்டும்.

ஒவ்வொரு ஜில்லா முக்கிய தோழர்களும் அவரவர்கள் ஒப்புக்கொண்ட அளவுக்காவது ஜில்லா கோட்டா (பங்கு)த் தொகையை உடனே அனுப்பிக் கொடுக்க வேண்டிக் கொள்ளுகிறோம்.

## கூட்டத்தில் கலவரம்

பொதுக்கூட்டங்களில் கலவரம் நடத்தும் கேவலத்தன்மை நம் நாட்டு மக்களிடமிருந்து இந்தக் காலத்திலும் நீங்கவில்லை என்பது மிகுதியும் வருத்தப்படத்தக்க சேதியாகும்.

பாமர மக்களிடமிருந்து பொதுக் கூட்டக் கலவரங்கள், காலித் தனங்கள் இப்போது பெரிதும் புறப்படுவதில்லை. தங்களை நாகரீகமக்கள் என்றும், பொதுநலத் தொண்டர்கள் என்றும், பெரிய தியாகிகள் என்றும் எண்ணிக் கொண்டிருப்பவர்களிடமிருந்தும், எதிர்காலத் தலைவர்கள், பட்டம், பதவி ஆளர்கள் ஆகப்போகிறவர்கள், ஆசைப்படுபவர்கள் ஆகியவர்களிடமிருந்துமே பெரிதும் குழப்பம், கலவரம், காலித்தனம் ஆகியவை உதித்து உருவாகி வெளிப்பட்டுத் தொல்லை விளைவிக்கின்றன.

ஆராய்ச்சிப்படி சொல்லவேண்டுமானால் இந்த மாதிரி காலித்தனங்கள், குழப்பங்கள் ஆகியவை பொதுக்கூட்டங்களில் நடத்துவது நம்நாட்டுப் பார்ப்பனர் மூளைகளிடம் இருந்துதான் முதன்முதல் உற்பத்தி ஆயிற்று என்று சொல்லலாம். ஆனால் எந்தப் பார்ப்பனரும் வெளிப்படையாய் நடக்கும் எப்படிப்பட்ட காலித்தனத்திற்கும் நம்மவர்களையே கூலிகளாக வைத்தும் ஏவிவிட்டும் ஏமாற்றியும் வசப்படுத்தியும் நடத்தச் செய்திருக்கிறார்கள். இது காந்தி வரவு துவக்கத்தில் 'காங்கரஸ்'காரர்களால் ஆரம்பிக்கப்பட்டு வெற்றியும் அடைந்து "காங்கரஸ் அல்லாதவர்களுக்கு மேடை இல்லை" என்கிற நிலை அடைந்தது. அதில் அவர்களுக்கு அடுத்தாற்போல் மதவாதிகள், செல்வவான்கள் முதலியவர்கள் அதைப் பின்பற்றி வந்திருக்கிறார்கள். பிறகு இதில் அனுபவம் பெற்றவர்களும் தேசியவாதிகளும் தங்களுக்கு மாறான கருத்துக்கொண்ட எந்தக் காரியத்திற்கும் இதைப் பயன்படுத்தவேண்டியவர்களாக ஆகிவிட்டார்கள்.

இந்தச் சிறுமைத்தனம் நம் நாட்டில் இருந்து அடியோடு அகற்றப்பட்டே ஆகவேண்டும். அதற்குக் கூட்டத்திற்கு வந்து கலகம் காலித்தனம் செய்பவர்கள் திருத்தப்பாடு அடையவேண்டியது எவ்வளவு அவசியமோ அதுபோலவே கூட்டம் நடத்துகிறவர்களும் ஒரு அளவுக்காவது திருத்தப்பாடு அடையவேண்டியது அவசியமாகும். வெளியில் வந்து கூட்டம்போட்டுப் பேசுவது, பிரசாரம் செய்வது, மக்கள் ஆதரவு தேடுவது என்றால் அது சாதாரணமான காரியமல்ல. இரைமறைவில், பாதுகாப்புக்குட்பட்ட இடத்தில் இருந்துகொண்டு தனி அறையில் தாளிட்டுக்கொண்டு எதுவும் பேசலாம், எதையும் எழுதலாம் என்றாலும், அதையுங்கூட பரிதபிக்கத்தக்க - கூலிக்கோர்த்திற்கு சேர்த்ததைக்கொண்டு எனக் கிட்டால் அதுவும் இந்தக்காலத்தில் யாருக்கும் சர்வசாதாரணமான காரியம் என்று கருதிவிட முடியாது.

## வேண்டுகோள்

திருச்சி மாநாட்டுக்கு உங்கள் ஜில்லா கோட்டாப்படி உங்கள் பங்கை உடனே அனுப்பிக் கொடுங்கள். யாராவது வந்து கேட்கவேண்டுமென்று காத்திருக்காதீர்கள். ஏராளமான பிரதிநிதிகளைச் சேர்த்துவையுங்கள்.

ஆகவே நாட்டில் பொதுக்கூட்டங்கள் நடக்கும் தன்மை நாகரீகமடையவேண்டுமென்றால் கூட்டம் நடத்துபவர்களும் கூட்டத்திற்கு வருகிறவர்களும் திருத்தப்பாடும், நாணயமும், ஒழுங்குமுறையும் கொண்டவர்களாக ஆகவேண்டும் என்பதுதான் நியாயமாகும்.

என்றாலும் கூட்டத்திற்கு வருகிறவர்கள் என்பவர்கள் எவரும் கூட்ட ஒழுங்கு முறைக்கு மாறாக நடந்துகொள்ளாமல் இருந்து கூட்டம் நன்றாய் நடக்கவும் இடம் கொடுக்கவேண்டும். கூட்டம் கூட்டுபவர்களும், பேசவருபவர்களும், கூட்டத்திற்கு வருபவர்களுக்கும் பேச்சைக் கேட்க வருபவர்களுக்கும் பேசுவதைக் கேட்டதின் பயனாய் ஒரு படிப்பினையை அடையும்படிச் செய்யவேண்டும். தங்களுக்கு வேண்டாதவர்களைத் தாக்கி இழித்துக்கூற என்று கூட்டம் கூட்டுவதும் பேசுவதும் அறிவுடையதாகவோ பயனுண்டாக்குவதாகவோ ஆகிவிடாது. கேட்பவர்களுக்குப் பேச்சு பிடிக்காவிட்டால் வெளியில் வந்துவிடவேண்டும். இல்லாவிட்டால் எல்லாவற்றையும் மனதில் வாங்கி, அனுமதித்து தங்களது மதிப்புகளை, அபிப்பிராயங்களை மற்றொரு பொதுக்கூட்டம் கூட்டி வைத்துப்பேசலாம். ஒரு பேச்சைக் கேட்டவுடனேயே மக்கள் ஏமாந்துவிடுவார்கள் என்று கவலைப்படுபவர்கள் தங்கள் சங்கதியையும் மக்கள் கேட்கும்படி செய்து மக்களை ஏமாற்றத்தில் இருந்து காப்பாற்றவேண்டுமே ஒழிய குழப்பம் ஏற்பட நடந்து கூட்டத்தைக் கலைக்கச் செய்வதால் காப்பாற்றலாம் என்பது யோக்கிய பொறுப்பான நாகரீக மக்களின் [illegible] காரியம் ஆகாது.

இது நம்முடைய சுமார் 30 வருஷத்திய அனுபவமாகும். இன்று நேற்றோ, அதற்கு ஆகவும் பயந்தோ, தாட்சண்யப்பட்டோ, புதிதாய் புத்திசொல்லவந்தோ சொல்லுவதல்ல இது.

ஆனால் உள்ளத்தில் ஒரு கருத்து, ஒளிமறைவில் சதியாலோசனை சபையில் ஒரு பேச்சு, பந்தோபஸ்தான பாதுகாப்புக் கொண்ட இடத்தில் ஒரு மாதிரிப் பேச்சு (வசவு மாலை,) திட்டத்தில், காரியத்தில் ஒரு வஞ்சக வேலை ஆகியவைகளை மக்கள் அறியும்படியாகவே செய்துவிட்டு அதன்மூலம் சாதாரண மக்களையோ சம்பந்தப்பட்ட மக்களையோ கொதிப்படையும்படியும் செய்துவிட்டு அவைகளுக்கு ஆதரவுதேட பொதுக்கூட்டங்களுக்கு

---

## திராவிடர் கழகத்திற்கு

(ஜஸ்டிஸ் கட்சிக்கு)

8-9-45 வரையில்

அங்கத்தினர்கள் 33970

சந்தா ரூ. 3371—2—0

வந்து எவ்வளவுதான் நகான் கவனம்போல் நடித்தாலும் பல வினைமாலை—பக்குவம் பரிபூரணமானதாக—குருட்டு பக்தி உள்ள மக்களுக்கு குத்திகமே, வெறியோ, சகிப்புத்தன்மை இல்லாமையோ வந்துதானேயிருக்கும். இதைக்குற்றம் சொல்லுகிறவர்கள் இயற்கை அறியாதவர்களாகத்தான் இருக்க வேண்டும். அதனால்தான் கூட்டம் நடத்துகிற முறையும் கூட்டம் நடத்துகிறவர்களும் கண்ணியத் துறையை நோக்கிச் செல்வதன் மூலம் தான் பெரிதும் கூட்டத்திற்கு வந்து குழப்பம் செய்கிறவர்களைக் கண்டித்து, இழித்துக் கூறி, ஏன்! தண்டித்தும்கூட இந்தக் கீழ்த்தர முறையைச் சீர்திருத்த முடியும். அப்படிக்கில்லாமல் சீர்திருத்த முயற்சிப்பது "நான் ஏமாற்றுவேன், நீ ஏமாறத்தான் வேண்டும். அல்லது மற்றவர்கள் ஏமாற நீ வழி அளிக்கத்தான் வேண்டும்" என்பது போலத்தான் முடியும்.

தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், திருமலைசாமி, கண்ணப்பர், தண்டபாணிப் பிள்ளை, என். இராமநாதன், டாக்டர் கிருஷ்ணசாமி போன்ற அடிக்கடி எஜமானர்களை மாற்றிக்கொள்ளுகிறவர்களும், கட்சி மாற்றுகிறவர்களும், கொள்கை மாற்றுகிறவர்களும், திட்டம்மாற்றுகிறவர்களும் அதாவது கட்சி மூலமாகவாவது இல்லாமல் தனிப்பட்ட முறையில், மக்களுக்கும் அதன் காரண காரியம் புரியாத முறையிலும், சந்தேகப்படும் முறையிலும் மாற்றுகிறவர்கள் பொதுக் கூட்டங்களில் மிக்க ஜாக்கிரதையுடன் தான் காணப்படவேண்டும். இதை ஏன் சொல்லுகிறோம் என்றால் தோழர் சி. ராஜகோபாலாச்சாரியாரின் நிலைமையே பார்ப்போம். அவரது மற்றவர்கள் [illegible]ருக்கு கண்ணியக் குறைவான உள் எண்ணத்தையோ சொந்த வாழ்வுப் பெருக்கமான சுயநலத்தையோ தனக்குத் தனிப்பட்ட சௌகரியத்தையோ தனது தனிப்பட்ட வாழ்க்கைச் சௌகரியத்தையோ குறிவைத்து நடந்துகொள்ளுகிறார் என்று அவரது எதிரிகளில் கூட பெரும்பாலோர் சொல்லமாட்டார்கள். அப்படிப்பட்ட அவர் வெறுக்கப்பட்ட நிலை இன்று எப்படி இருக்கிறது? அல்லது அன்றுதான், அதாவது அவர் பிரதம மந்திரியாய் இருந்தபோது தான் எப்படி இருந்தது? அல்லது பெரியார் ஈ. வெ. ரா. செல்லும் கூட்டங்களில்தானாகட்டும் 100க்கு 10 அல்லது 5 கூட்டமாவது என்ன ஆகிறது? சென்றமாதம் புதுச்சேரிக் கூட்டம் பலாத்காரத் தாக்குதலில் முடிந்தது. பெரியாருக்கு ஒன்றும் இல்லை என்றாலும் நம் நாட்டு மக்களால் போற்றிப்பாராட்டிப் புகழப்படும் புலவர் மணி உட்பட்ட வீர வாலிபர்களுக்கும் தாக்குதல் நடந்தது. சென்ற வாரம் மதுரையில் தோழர் எம். ஆர். ராதா அவர்கள் நாடகத்தில் பெரியார் பேசும் போது "பேச்சு வேண்டாம் நாடகம், நாடகம்" என்ற கூச்சல் பெரியார் பேச்சைக் கேட்கவொட்டாமல் செய்தது.

தோழர் இராதா அவர்கள் மைதியமாய் எழுந்து "நாடகம் முடிந்துவிட்டது, வேடிக்கைதான் பாக்கி, இது முடிந்தால் நாடக முடிவு" என்று பெருங்கூப்பாடு போட்ட பிறகு அந்தக் கூப்பாட்டு அதிசயத்திற்கு ஆக கூச்சல்கள் நின்று பிறகு பேச்சு முடிந்து நாடகம் கலைந்தது என்றாலும் பெரியார் வீடு திரும்புகையில் 10க்கு ஒன்றாவது பெரியார் ஒழிக்கூச்சலுடன், காரின்மீது ஒரு கல்லும் தூக்கியிட்டது. இதற்கென்னப் பரிகாரம் வேண்டும் தான். அவசியம் வேண்டும்தான். ஆனால் வெற்றிபெறும் தன்மையில் வேண்டும். வெறுப்பை உண்டாக்கி விட்டுவிட்டு ஓடும் தன்மையில் செய்யும் பரிகாரம் பயன்படாது என்போம்.

சென்னைக் கூட்டத்தில் தோழர் பாண்டியன் அவர்கள் தலைமைவகித்த போது குழப்பம் ஏற்பட்டது குறித்து மிகுந்தும் வருந்துகிறோம். அதிலும் குழப்பம் செய்தவர்கள் என்பவர்களுக்கு ஆக, அதிகாரமில்லாவிட்டாலும் வருத்தம் தெரிவிக்கிறோம். அதோடு கூடவே மற்றொன்றும் தெரிவித்துக்கொள்ளவேண்டியதாய் இருக்கிறது. மதுரை, பட்டிவீரன்பட்டி முதலிய இடங்களில் தோழர் பாண்டியன் அவர்கள் தலைமையில் பலர் பேசியதாகக் காணப்படும், சொல்லப்படும் பேச்சுக்களை அறிந்த எவர்தான் அக்கூட்டத்தில் இருந்திருந்தால் தோழர் பாண்டியன் அவர்களை வேறாகப் பிரித்துக்காண முடியும்? பாண்டியன் அவர்களுக்கு அப்பேச்சுகள் சிறிதும் சம்மதமானவையல்ல என்றாலும் "இறு கல்லை எடுத்து மலந்துடைத்தால் கையில் மலம் படும்" என்பது பழங்காலப் பாமர மக்கள் பழமொழியாகும். இந்தப்படியான மக்கள் சுபாவங்கள் அவருக்கு என்றைக்கும் பயனளிக்காது என்போம். புதுக்கட்சி ஏற்படுவதற்குக் கொள்கைகள் காரணமாக இருக்கலாம். ஆனால் ஒரு குறிப்பிட்ட மனிதனின் நடத்தை பிடியாமல் அம்மனிதனின் "எதிரிகளைக் கொண்டு" அதுவும் முதலில் குத்தப்பட்ட "வீரர்"களைக் கொண்டு கட்சி அமைத்துக்கொண்டு நாட்டிற்குச் சென்றால் அவ்வீரர்களின் தன்மைகளின், நடத்தைகளின் எதிரொலியும் பிரதிபிம்பமும் யாருக்குத்தானாகட்டும் எப்படிக் காணப்படாமல் போய்விடும்?

எப்படி இருந்தாலும் சரி. உண்மையான ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் என்பவர்கள் யாராய் இருந்தாலும், உண்மையான சுயமரியாதைக்காரர்கள் யாராய் இருந்தாலும், எங்கிருந்தாலும் அவர்கள் இனிமேல் இப்பேர்ப்பட்ட அதாவது காங்கரஸ், கம்யூனிஸ்ட், ராயிஸ்ட், கிருஷ்ணசாமியின் வட்டம் பதன் "S. I. L. F." ஸ்ட், ராமநாதனின் சுயமரியாதையிஸ்ட், என்ற கட்சிகள் எதுவானாலும் அவைகளில் நம்மவர்கள் கலகம் குழப்பம் செய்தார்கள் என்கின்ற பெயருக்கும் முணுமுணுப்புக்கும் கூட இடமில்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று கண்டிப்பாக வேண்டிக்கொள்ளுகிறோம். காலித்தனம் குழப்பம் என்பது எப்போதும் ஒருவருக்கே சொந்தமல்ல. காலித்தனத்துக்கு நியாயம் அநியாயம் என்பது கிடையாது. மக்களுக்கு அறிவு வளரவேண்டுமானால் யாரையும் பேச தாராளமாய் அனுமதிக்க வேண்டும்.

தோழர்கள் எ. கிருஷ்ணசாமியும், என். ராமநாதனும், பி. பாலசுப்பிரமணியமும் தேர்தல்களுக்கு நிற்பதற்கு ஆக செய்யப்படும் முன்னே ஜஸ்டிஸ்—சுயமரியாதைக்

## பெரியார் தொண்டர்படைக் கூட்டம்

திருச்சி மாநாடுகளில் பங்கு கொண்டு தொண்டு செய்ய 'பெரியார் தொண்டர் படை' உறுப்பினர்கள் 31-8-45 வெள்ளி மாலை 7 மணிக்கு படைத் தலைவர் தோழர் இ. பெ. வேதாசலம் அவர்கள் தலைமையில் திருச்சி Y. M. D. A. கட்டிடத்தில் கூடினார்கள். தோழர் பிரான்சிஸ் அவர்கள் காப்டனாகவும் பொன்மலை தோழர் பராங்குசம், சீரங்கம் தோழர் பரமசிவம் இவர்கள் உதவிக் காப்டன்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர். மாநாட்டுத் தொண்டர்கள் கடமை பற்றி முடிவு செய்யப்பட்டது. தொண்டர் படையில் சேர விரும்பும் தோழர்கள் விரைவில் தங்கள் பெயரைப் பதிவு செய்யக்கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

## சிவாஜி

திருச்சி மாநாடுகள் நடைபெற்ற பின்னர் அதைத் தொடர்ந்து அக்டோபர் மாதம் சென்னை மாவட்ட சுயமரியாதை மாநாடும், அடுத்த நாள் தளபதி அண்ணாதுரை அவர்கள் மற்றும் காஞ்சி நடிகர் கழகத்தாருடன் நடிக்கும் "சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்" நாடகமும் நடைபெறும். இதுவரை ஒத்திவைக்க நேரிட்டதற்கு மன்னிக்குமாறும் மாநாடு, நாடகங்களின் தேதி முதலிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படுமெனவும் தோழர் என். வி. நடராசன் எழுதுகிறார்.

---

கட்சிகளின் பேரால் சென்னையில் கூட்டப்படும் கூட்டங்கள் என்று தெரியவருகிறது. "இதற்கு ஆக நடக்கும் கூட்டங்களில் கலகம் குழப்பம் ஏற்படுத்த ஜஸ்டிஸ், சுயமரியாதை உண்மைக் கட்சியார் பங்கு கொண்டார்கள்!" என்று சொல்ல நேரும்படியாக நடந்துகொள்வதுடன் நமக்கு மிக மிக அவமானகரமான காரியமாகும். ஆதலால் நம் தோழர்கள் அருள்கூர்ந்து, கருணை வைத்து இதைக் கவனித்து இனி இந்தப் பேருக்கு ஆளாகாமல் இருப்பார்களாக.

## திராவிடப் படை

திருச்சி மாநாடுகளில் கலந்து கொள்வதற்காகத் தஞ்சாவூரிலிருந்து ஒரு திராவிடப் படை புறப்பட்டு அம்மன்பேட்டை, கண்டியூர், திருவையாறு, திருப்பந்துருத்தி, நடுக்காவேரி, செந்தலை, கருப்பூர், மைக்கேல்பட்டி, திருக்காட்டுப்பள்ளி, கல்லணை என்ற ஊர்களின் வழியாகச் சென்று திருச்சியில் நடைபெறும் மாநாடுகளில் கலந்துகொள்ளும்.

இத்திராவிடப் படையில் சேர விரும்புபவர்கள் கீழ்கண்ட இடத்திற்குக் கடிதம் மூலமாகவோ, நேரிலோ தெரிவித்துக் கொள்ளலாம். படை புறப்படுவது 27-9-45-உ காலை 5 மணிக்கு.

டி. வ. பாலகிருஷ்ணன்,
ஸ்டாலின் சைக்கிள் ஸ்டோர்,
வடக்கு ராஜவீதி, தஞ்சாவூர்.

## புவனகிரி திராவிடர்கழக முதலாம் ஆண்டுவிழா

டை ஆண்டுவிழா 12-8-45 காலை தோழர் கே. வி. அழகிரிசாமி தலைமையில் தொடங்கியது. தோழர் அன்பழகன் பெரியார் படத்தையும், தோழர் எஸ். கே. சாமி செல்வம் படத்தையும் திறந்து வைத்தனர். தோழர் ஏ. ஆறுமுகம் கொடியேற்றிவைத்தார். புலவர் கா. மு. மாணிக்கம் 'மூவாலன் வாசகசாலை'யைத் திறந்துவைத்த பின், தலைவர் 'பிரிகிறவர்கள் பிரிந்து போகட்டும்' என்பது பற்றி சொற்பொழிவாற்றினார். நன்றி கூறுதலுடன் ஆண்டுவிழா இனிது முடிந்தது.

பின்னர் மாலை 6 மணிக்கு தோழர் வ. கே. ராமனாதன் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் எஸ். கே. சாமி, வெள்ளைவாரணம், [illegible], காஞ்சி கலியாணசுந்தரம், க. அன்பழகன், மதியழகன், கே. வி. அழகிரிசாமி ஆகியோர் விரிவாகப் பேசினார்கள்.

டை ஆண்டுவிழாவுக்கு வரவு ரூ. 312 என்றும், செலவு ரூ. 374-14-9 என்றும், ஆக அதிகச் செலவு ரூ. 62-14-9 என்றும் கழகத் தலைவர் தோழர் கே. நமசிவாயம் எழுதுகிறார்.

## மாணவர் கவனிக்க!

மாண்புமிக்க மாணவத் தோழர்களே! ஆங்காங்கே திராவிட மாணவர் மாநாடுகள் நடத்துவதற்கான முயற்சிகள் நடந்துவருகின்றன. அதற்குள் எல்லா ஊர்களிலும் மாணவர் கழகங்கள் ஏற்படுத்தி, எமக்கு உடனே அறிவிக்கவும். நமது மாகாணத்திலுள்ள திராவிட மாணவர் கழகங்களின் மொத்த எண்ணிக்கை இன்னும் திட்டமாகத் தெரியவில்லை. ஆகவே அன்புகூர்ந்து ஆங்காங்குள்ள மாணவர் கழகத்தினர் தங்கள் கழகம் இருக்கும் ஊர், ஜில்லா, கழகத்தின் மொத்த அங்கத்தினர், நிர்வாக உறுப்பினர் பெயர்கள் ஆகியவற்றை விபரமாக எழுதிக் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பினால் யாங்கள் எண்ணியிருக்கும் வண்ணம் அவற்றையெல்லாம் சேர்த்து ஒரு புத்தகமாக வெளியிட உதவியாயிருக்கும். எனவே எங்கள் வேண்டுகோளை உடனே கவனிக்குமாறு மாணவத் தோழர்களை மீண்டும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

செயலாளர்,
திராவிட மாணவர் பிரசாரக் கழகம்,
ஈரோடு

## அறிவிப்பு

தென்னாற்காடு மாவட்ட திராவிடர் கழக 2-வது மாநாடு திட்டக்குடியில் நடைபெற்றதற்கு இந்த மாவட்டத்திலுள்ள கழகங்களுக்கு கொடுத்திருந்த நன்கொடை ரசீது புத்தகங்களை இதுவரையில் சிலர் அனுப்பாமலிருப்பதாகவும், உடனே திட்டக்குடி திராவிடர் கழகத்திற்கு அனுப்ப வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## வட ஆற்காடு

வட ஆற்காடு மாவட்டத்தில் திருச்சி மாநாடுகட்காக இதுவரை வசூலாகியுள்ளது ரூ. 140 தான். நாட்கள் நெருங்கிவிட்டபடியால் பூரா கோட்டாவும் நிறைவதற்கு உடனே தோழர்கள் யாவரும் ஒத்துழைக்குமாறு தோழர் வி. எம். ராஜமாணிக்கம் வேண்டுகிறார்.

## மறைவு

தஞ்சை, கரந்தை, வடக்குப்புரியைச் சேர்ந்த திராவிடர் கழக அங்கத்தினர் தோழர் சிவசுப்ரமணியம் அவர்களின் தந்தையார் தோழர் கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் 17-8-45 இரவு இயற்கையெய்தினதற்கு வருந்தி கரந்தை திராவிட வாலிபர் கழகத்தார் தம் அநுதாபம் தெரிவிக்கின்றனர்.

# திருச்சி மாநாடு நிர்வாகக் கமிட்டி கூட்டம்

7-9-45-ந் தேதி திருச்சி டவுன் ஹாலில் ஜஸ்டிஸ்—சுயமரியாதைக் கட்சிகள் மாகாண மாநாட்டு காரியக்கூட்டம் மாலை 5 மணிக்கு நடந்தது. 50 அங்கத்தினர்கள் பேர் வந்திருந்தார்கள்.

நடந்த நடவடிக்கை

1. புத்தூர் மைதானத்தில் மாநாடு நடத்த 200X200 அடி அளவுள்ள கொட்டகை போட காண்ட்ராக்ட் விட்டது.

2. இதுவரை ஆன வரும் தொகை 2500.

3. உணவுவிடுதிக்காரருக்கு சமையலுக்கு ஆக 100X50 ஒன்றும், 40X50 ஒன்றும் பந்தல் போட ஏற்பாடு செய்யப்பட்டது.

4. ஸினிமா விளம்பர ஏற்பாடு.

5. அரிசிக்கு ரேஷன் ஆபீசரிடம் அனுமதி.

6. பெண்களுக்கு கட்டணம் இல்லை. பெண்களுக்குத் தனி இடம். ஆனால் வருபவர்கள் 4 நாட்களுக்கு முன் தெரிவிக்கவேண்டும்.

7. மதுரை சேலம், கோவை, இராமநாதபுரம், தஞ்சை, தென்னார்க்காடு ஆகிய ஜில்லாக்களில் இருந்து தலைவர் தேர்ந்தெடுத்து பிரேரேபிக்க செய்யப்பட்ட தீர்மானங்கள் வந்தவை தெரிவிக்கப்பட்டன. மற்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

8. தொண்டர் படைக்கு 200 பேர்கள் பொன்மலைத் தோழர்கள் பதிந்துகொண்டார்கள்.

தோழர்கள் பிரான்சிஸ், ராமசிவம் ஆகியவர்கள் தொண்டர் தலைவர்கள்.

ஜில்லாக்களுக்குத் தொண்டர்கள் சென்று பிரசாரம் செய்வது என்பவைகாரிய பல விஷயங்கள் தெரிவிக்கப்பட்டன.

9. மறுபடி காரியக் கூட்டம் 13-ந் தேதி கூடும்.

10. மாநாடு செலவுக்கு ஜில்லாக்களின் கோட்டாப் பணங்களையும் ஆங்காங்கு வாங்கிக்கொண்டு, அனுப்பப்பட்ட டிக்கட்டுகளின் பணங்களையும் 13-ந் தேதிக்குள் வந்து சேரும்படி அனுப்பிக் கொடுக்கவேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்பட்டது.

11. ஆங்காங்குள்ள கிளைச்சங்கத்தார் அந்தந்த ஊரில் பொதுக்கூட்டம் போட்டுச் செய்தியைப் பிரசாரம் செய்யப்பட வேண்டும்.

12. 20ந் தேதிக்குள் தீர்மானங்கள் அனுப்பப்பட வேண்டும் என்பனவாகும்.

## பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்

பெரியார் ஈ. வெ. ரா. சென்ற வாரம் ஆத்தங்குடி, மதுரை, பழனி, கோட்டை, விருத்தாசலம், திட்டக்குடி, கும்பகோணம், திருச்சி சென்றுவிட்டு ஈரோடு வந்து சேர்ந்து மறுபடி 7-ந் தேதி திருச்சி சென்றுவிட்டு 8-ந் தேதி சனிக்கிழமை ஈரோடு சேர்ந்தார்.

9-ந் தேதி இராசிபுரம் மாநாட்டுக்கும், 10-ல் சேலம் திராவிட மாணவர் கழகத் தொடக்கவிழாவுக்கும், 11-ல் கோவைக்கும் 12-ல் ஈரோடு அல்லது சென்னைக்கும் சென்றுவிட்டு 13-ந் தேதி திருச்சி பொன்மலைத் தோழர் திருமணத்திற்கும், கமிட்டிக் கூட்டத்திற்கும் செல்லுவார். இறுதி திருச்சி மாநாடு முடியும் வரையில் வேறெந்த அழைப்பையும், நிகழ்ச்சியையும் ஏற்றுக்கொள்ள முடியாதெனத் தெரிவித்தார்.

## வேண்டுகோள்

மாநாடு டிக்கட்டுகள் அனுப்பப்பட்டவர்களும், தருவித்தவர்களும், அதன் தொகைகளை தயவுசெய்து 15-ந் தேதிக்கு முன் ஆங்காங்கு அனுப்பிக்கொடுக்கும்படி வேண்டுகிறோம்.

## வருந்துகிறோம்

திருச்சி ஜில்லா பிரபல மிராசுதாரரும் ஆப்காரி கண்ட்ராக்டரும் ஜில்லா போர்டு அங்கத்தினரும் திருச்சி ஜில்லா திராவிடக் கழக உபதலைவருமான தோழர் அ. அங்கமுத்து அம்பலகாரர் அவர்கள் 29-8-45 அன்று இயற்கை எய்திய செய்தி கேட்டு மிகவும் வருந்துவதோடு அன்னாரின் குடும்பத்தாருக்கு எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அவரது பிற்கடன் நிகழ்ச்சிகள் 11-9-45ல் சோழக்கநல்லூரில் நடைபெறும்.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரும், நீதிக் கட்சியில் ஆர்வமுள்ளவருமான தோழர் மோசூர்-கந்தசாமி முதலியார் பி. ஏ., அவர்கள் 29-8-45 காலை இயற்கையடைந்த செய்தி கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம். அவரது உறவினர்களுக்கு எம் அனுதாபங்கள் உரித்தாகுக.

பெரியாரின் 'நீத்தார் வழிபாடு' 12-9-45-ல் சென்னையில் நடைபெறும்.

## திருமணம்

பொன்மலைத் தோழர்கள் கடேசன்-மருதம்மாள் சீர்திருத்தத் திருமணம் பெரியார் ஈ. வெ. ரா. தலைமையில் 13-9-45 காலை 11 மணிக்கு நடைபெறும்.

## பிறப்பு

ராசிபுரம் தோழர் வி. சுந்தரம் அவர்கள் மனைவியார் சரஸ்வதிக்கு ஆண்குழந்தை பிறந்தது, வெற்றி மணி என்று பெயரிடப்பட்டிருக்கிறது.




இன்றைய திராவிட உலகத்தின் சம்பவம்! —
ஒவ்வொரு திராவிடமக்களுடைய உள்ளத்தையும், உடலையும் சிலிர்க்கவைக்கிறது!!

திரு N. S. கிருஷ்ணன் சிறந்த மேதாவி

சிறந்த எழுத்தாளர் தோழர் வ. ரா. அவர்கள் எழுதியது. மேலும், இப்பதிப்பில் கவிதைகளும், கட்டுரையும் சேர்த்துள்ளோம். உயர்ந்த பதிப்பு விலை 0—2—6.

மாதிரி பெற 0-3-3 தபால் பில்லைகள் அனுப்புக! கைவசம் கொஞ்ச பிரதிகளே உள்ளது.

விபரங்கட்கு: திராவிடன் பதிப்பகம், தபால்பெட்டி 18, வேலூர். வ. ஆ.


ரோஜா முத்தையா

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய வேண்டுமென்று எல்லோரையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தோழர் வடிவேல் செட்டியார் சுயமரியாதைக்காரர்களை அறிவிலிகள் என்று ராசிபுரம் கண்ணபிரான் பஜனைசபையில் சொன்னதாக 'சுதேசமித்திரனி'லிருக்கிறது. எங்களுக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. உலகமிருக்கிறது வியாயமிருக்கிறது, இன்றினும் சோரம் பார்த்துக்கொண்டிருக்கும் பண்டிதர்களிருக்கிறார்கள்.

## லட்சுமி யோக்கியதை?

இலட்சுமி இமயமலைச்சாரலில் உலாவிக்கொண்டிருந்தாள், அவ்வழியே ஒருரிஷி போனார். அவரைக் கண்டு இலட்சுமிமோகித்தாள். உடனே இலட்சுமிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்துவிட்டது. இது விஷ்ணுவிற்குத் தெரிந்து சண்டாள ஸ்திரியாக போகக்கடவதென்று இலட்சுமியைச் சபித்தார். அப்படி இலட்சுமி சண்டாளச்சியாகிவிட்ட காவியமே காதம்பரி என்னும் நூல். இது பாணபட்டர் என்னும் பண்டிதரால் எழுதப்பட்டது. காதம்பரி என்னும் நூல் வடமொழி படிக்கும் மாணவர்களுக்குப் பாடமாகப் பள்ளியில் வைக்கப்பட்டிருக்கிறது. கண்டவுடன் மோகித்த உடன் குழந்தை பிறந்துவிடுமா? சீதை இலட்சுமியின் அம்சமென்று சிலரும், ராவணன் கொண்டுபோனது மாயா சீதை என்றும், ராமரைப் போலவேமாயா சம்பந்தம் சீதைக்குமுன்டென்று சிலரும் சொல்லுவார்கள். சாட்சாத் இலட்சுமியே ரிஷியைக் கண்டு மோகித்துப் பெண் குழந்தையைப் பிரசவித்து விஷ்ணுவால் சண்டாள ஸ்திரியானாள் என்று பண்டிதர்களே சொல்லியிருக்கிறார்கள். காதம்பரி செய்த பாணபட்டர் கூத்தாழ்வாரின் மகனாயிருந்தாலும், போஜராஜாவின் பட்டாரகவிருந்தாலும் இந்தப் பண்டிதர்களைவிட மேலானவரே.

பிர்மம், மாயா, அநித்யா என்று பேசி விட்டிறக்கும் போனவுடன் அங்கிலுள்ள சாமக்கிரியைகளுக்கு வருந்தி சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் என்று சொல்லி பிராரப்தம் அனுபவித்துத் தீரவேண்டுமென்று முடிவு கட்டி அவனோத்து சுயமரியாதைக்காரர்களைக் குற்றம் சொல்ல வந்த தோழர் வடிவேல் செட்டியாரும், அவரைப் புகழும் முதலியாரும், மறைமலையடிகள் நமசிவாய முதலியார் வரசற்படியை எட்டிப் பார்த்தார்களானால் நல்லுலகம் உதயமாகும்.

# திராவிட நாட்டுச் செய்திகள்

திருநெல்வேலி கண்ணப்பர் மடத்தில் 13-8-45-ல் விவேகானந்த சபை சார்பில் நடந்த கூட்டத்தில் தோழர் வித்வான் சி. இலக்குவனார் B. O. L. பேசுகையில் திராவிட நாட்டுப் பிரிவினையை விளக்கிப் பேசினார். கூட்டத்திற்குத் தோழர்கள் க.மு. பிரமநாயகம் பிள்ளை, ஆ. முத்துக்கிருஷ்ணன் ஆகியோரும் சென்றிருந்தனர் என்று திருநெல்வேலி டவுன், கெ. 12, மகிழ்வண்ணபுரம் தோழர் வ. முத்துக்கிருஷ்ணன் எழுதுகிறார்.

வடபாதி மங்கலம் இளைஞர்களர் சங்க முதலாம் ஆண்டு விழா தோழர் டி. என். லெட்சப்பா தலைமையில் 13-8-45 மாலை 3 மணிக்குத் தொடங்கியது. தோழர் சோமசுந்தரம் கொடியேற்றினார். தோழர்கள் கே. என். பிச்சப்பா, கே. எஸ். மகாதேவன், கோதாவரி அம்மாள், திருப்புகழ் சுவாமி ஆகியோர் சமூக நலன்பற்றிப் பேசினர். வித்வான் பெண்ணையா சுயமரணதற்கு அநுதாபம் தெரிவிக்கப்பட்டு கூட்டம் முடிந்தது.

திருவாரூர் இளைஞர்கள் சங்கத்தில் 11-8-45 மாலை 3மணிக்கு தோழர் நடராஜசுந்தரம் பிள்ளை தலைமையில் தோழர்கள் பிச்சப்பா, ராஜாங்கம், மகாதேவன், கிருஷ்ணன், காளிதாசன், சந்தானம் முதலியோர் பேசினர். நன்றி கூறுதலுடன் கூட்டம் முடிந்தது.

பம்பாய் அரசர்குளம் பொருளாதார ஐக்கிய கழகத்தின் சாதாரண கூட்டம் 19-8-45ல் தோழர் ரணமுத்து தலைமையில் கூடியது. பல தோழர்கள் பேசினர். கணக்கு பரிசீலனை செய்யப்பட்டு மீதி ரூ. 310-8-0 பொருளாளர் வசம் ஒப்புவிக்கப்பட்டது. தோழர் எஸ். சுப்பையா தாய்நாடு சென்றதால் அவருக்கு மாலை சூட்டப்பட்டது.

ஓமலூர் தாலுகா எலவம்பட்டியில்வெற்றிவிழா தோழர் சு. பி. ராமசாமி தலைமையில் 20-8-45-ல் நடைபெற்றது. தோழர் பி. பழனியப்பன் பேசினார். சமாதானம் ஏற்பட்டதும் டாக்டர் அம்பேத்கார் திட்டத்தை அமுல் நடத்தவேண்டுமென தீர்மானிக்கப்பட்டு தோழர் சு. எம். பழனியப்பன் நன்றி கூறலுடன் கூட்டம் முடிந்தது.

திருநெல்வேலி டவுனில் வெற்றிவிழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஊர்வலம் நடந்தது. ஏழை மக்களுக்கு உணவளிக்கப்பட்டது. இரவு கலெக்டர் தோழர் வி. என். விசுவநாதன் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் பலர் பேசினர். "குமார விலாஸ்" புரோப்ரைட்டர் தோழர் கே. எம். பிரமநாயகம் பிள்ளை அவர்கள் வெற்றி விழாவில் எடுத்துக்கொண்ட பெரும் முயற்சியைப் பாராட்டி கலெக்டரவர்கள் அவருக்கு ஒரு தங்கப் பதக்கம் பரிசளிக்கப்பட்டது.

பட்டுக்கோட்டை சுயமரியாதைச் சங்க நிர்வாகக் கமிட்டித் தேர்தல் தோழர் என். பரப்பையன் தலைமையில் 23-8-45-ல் பட்டுக்கோட்டை போஸ்டாபீஸ் தெரு கலையகம் வாசகசாலையில் நடந்தது. தோழர்கள் கே. என். சிவராமகிருஷ்ணன் தலைவர், கே. அருணாசலம் துணைத்தலைவர், என். பரப்பையன் செயலாளர், பெ. வரதராஜன் துணைச்செயலாளர், என் ரத்தினசாமி பொருளாளர் மற்றும் 8 பேர் கமிட்டி மெம்பர் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மதுரையில் 22-8-45 அன்று நடைபெற்ற தோழர்கள் வத்தலக்குண்டு எஸ். இராசமாணிக்கம்—ஜெயலட்சுமி வாழ்க்கை ஒப்பந்தத்திற்கு வந்திருந்தவர்களுக்கும் வாழ்த்து அன்பளிப்பு அனுப்பியவர்களுக்கும் மணமக்கள் நன்றி தெரிவிக்கிறார்கள். அத் திருமணத்தின் நினைவாக "குடி அரசு"க்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

சேலம் அம்மாப்பேட்டை ஜஸ்டிஸ் தமிழர் சங்கத்தின் கூட்டம் தோழர் எ. முருகேச முதலியார் தலைமையில் கூடியது. தோழர்கள் க. த. ஆறுமுக முதலியார், செ. கு. பழனியாண்டி முதலியார் இருவரும் சங்கத்து சாமான்கள் பூராவும் கொண்டு வந்து ஒப்புவிக்காததால் அவர்கள் பேரில் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள தோழர் தலைவர் எ. முருகேச முதலியாருக்கு அதிகாரம் அளிப்பதாயும் தோழர் க. த. ஆறுமுக முதலியார் டிப்டி கலெக்டர் கோர்ட்டில் ஒரு மினிட் புத்தகம் அளித்திருக்கும் மெம்பர்களையும் அவரையும் சங்கத்திலிருந்து 3 வருடங்களுக்கு நீக்கப்பட்டது என்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

25-8-45 குளித்தலை தமிழ் மாணவர்

கழகத்தின் தோழர் பிச்சை தலைமையில் தோழர்கள் கா. சுப்பிரமணிய பிள்ளை, வி. உலகநாத முதலியார் ஆகியோர் மறைவுக்காக அநுதாபம் தெரிவிக்கப்பட்டது. தோழர்கள் ரெங்கநாதன், பால சுப்பிரமணியம், வேணுகோபாலன், தங்கவேல் ஆகியோர் பேசினர்.

உதயமார்த்தாண்டபுரம் பஞ்சாயத்து போர்டு தேர்தலில் ஏகபோக கிராம மானேஜர் கிருஷ்ணசாமி அய்யர் எவ்வளவோ முயற்சித்தும் அவ்வளவற்றிலும் திராவிடத் தோழர்களே வெற்றிபெற்றனர் என்று தெரிகிறது!

13-8-45 புதுக்கோட்டை அறிவு வளர்ச்சிக் கழகத்தின் முதலாம் ஆண்டு விழாவில் தோழர் சண்முகஞ்செட்டியார் பி. ஏ., பி. எல்., எம் எல் ஸி, தலைமையில் தோழர்கள் தேவசேனன் பி. ஏ., ஞானவேல் பி. ஏ., ப. நீலகண்டன், செங்குட்டுவன், வி. பாலகிருஷ்ணன் ஆகியோர் பல சீர்திருத்த விஷயம் பற்றிப் பேசினர்.

திருச்சி, லால்குடி புள்ளம்பாடி இலாலயத்துக்கு எதிர் தென்னந்தோப்பில் 18-8-45 பகல் 11மணிக்கு திருச்சி மருத்துவர்குலசங்க பொருளாளர் தோழர் கு. சின்னையா அவர்கள் தலைமையில் லால்குடி தாலுக்கா மருத்துவகுலசங்க அமைப்புக் கூட்டம் கூடியது. சுற்றுப்புற கிராமங்களிலிருந்து மருத்துவமக்கள் திரளாக வந்திருந்தார்கள், அது சமயம் தோழர்கள் ஏ. வி. பெரியண்ணன், வி. பெருமாள், எல். ரங்க, மண்ணச்சநல்லூர் இ. மாணிக்கம் முதலியவர்கள் சங்கம் அவசியமா? நாம் ஏன் ஒன்றுசேரவேண்டும்? நாம் கல்வியடைய என்னசெய்ய வேண்டும்? நன்கம் செய்வதை நாம் செய்யாது! என்னும் பொருள்பற்றி பேசியதும், சங்கத்துக்கு செயற் குழுவினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் மா. பெரியண்ணன், துணைத் தலைவர்கள் ரங்குபேர்ல், கரியமாணிக்கம் தெ. பெரியசாமி, பொருளாளர் பெரியண்ணன் களைக்குப் பரிசோதகர் 2பேர், கருல்தார் 2பேர், கமிட்டி அங்கத்தினர்கள் 15பேர் தேர்ந்தெடுக்கப்பட்டதும், இ. மாணிக்கம், அரியலூர் ஜெயங்கொண்டம், பெரம்பலூர், உடையார்பாளையம் முதலிய ஊர்களிலும் சங்கம் அமைக்க அந்த ஊர் தோழர்கள் உதவவேண்டுமென்று கேட்டுக்கொண்டதும், நன்றி கூற, மாலை 3மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

லால்குடி மருத்துவகுல சங்கக் கூட்டம் 25-8-45 11 மணிக்கு தோழர் பெரியண்ணன் தலைமையில் நடந்தது. தோழர்கள் மாணிக்கம், சோமு பொற் பொழிவாற்றினர்!

மேலத்திருப்பந்துருத்தியில் மாணவர் சங்க ஆதரவில் தோழர் ஆலங்குடி தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் எஸ். ஆர். சுப்பையா, தனிகலான், ஆரோக்கியசாமி முதலியோர் பேசினர்.

தஞ்சை மருத்துவகுல சங்க 2-வது ஆண்டுவிழா தோழர் அகோரம் தலைமையில் நடந்தது. தோழர்கள் எஸ். ஆர். சுப்பையா, முத்து, பிச்சையப்ப, பக்கிரி பண்டிதர், கல்யாணசுந்தரம், நமசிவாயம், கணபதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

26-8-45 மாலை 7மணிக்கு சேலம் சுயமரியாதைச் சங்க கட்டிடத்தில் தோழர் வை. திருநாவுக்கரசு தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் "திராவிடர் நிலைமையும், மாணவர் கடமையும்" என்பதுபற்றி சேலம் கல்லூரி மாணவத் தோழர்கள் சோமசுந்தரம், குழந்தைசாமி, நடேசன், சதாசிவம், தியாகராசன், துரைசாமி, ராம், துரைசாமி, வெங்கடாசலம், ஈபார், பெரியசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கீடாமங்கலம் பஞ்சாயத்துபோர்டு எக்சிக்யூடிவ் ஆபீசர் தோழர் பிரமையா திருவடமருதூருக்கு மாற்றப்பட்டதற்காக 1-9-45 காலை ஜெட்சமி விலாஸ் பாடசாலையிலும், பகலில் பஞ்சாயத்துபோர்டு கட்டிடத்திலும், மாலை விக்டரி ரெக்ரியேஷன் கிளப்பிலும் விருந்துகள் நடைபெற்றன. பலர் அவரைப்பற்றிப் புகழ்ந்துபேசி மலர்மாலை சூட்டினர்.

குளூரில் 30-8-45 மாலை தோழர் கஞ்சப்பதேவர் வீட்டில் நடந்த சுயமரியாதைத் தோழர்கள் கூட்டத்தில் சுயமரியாதைச் சங்க கிளையின் [illegible] தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர்கள் எஸ். என். அற்புதசாமி தலைவர், கே. ராஜமாணிக்கம் செயலாளர், தங்கவேல் பொருளாளர், கஞ்சப்பதேவர், எஸ். ஆர். சுப்பிரமணியம், எஸ். பி. ஆறுமுகம், கே. கிருஷ்ணன், எம். நடராஜன், ரங்கா ஆகியோரும், தலைவர் நியமிக்கும் மற்றும் 4 பேரும் உறுப்பினர்கள்.

திருச்சி மாநாட்டுக்கு டிக்கட் விற்பனை வசூல் செய்வதென்றும், திராவிடர் கழகத்திற்கு உறுப்பினர் சேர்த்துத் தருவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கீரனூர் தாலுக்கா முதலாவது மருத்துவர் மாநாடு 25-8-45 காலை [illegible] ஹாலில் [illegible] தலைமையில் நடைபெற்றது. தோழர் பொன்னுசாமி கொடியேற்றினர். தோழர் கிருஷ்ணமூர்த்தி மகாநாட்டைத் திறந்து வைத்தார். தோழர் தங்கசாமி வரவேற்புரை நிகழ்த்தினர். தோழர் பிச்சை, பண்டித ஆனந்தம் படத்தைத் திறந்து வைத்தார். பின்னர் தோழர்கள் ஜனார்த்தனம் எம். ஏ., அப்பாவு, சுப்பையன், சீனிவாசன் ஆகியோர் பேசினர். பிற்பகலில் முக்கியமான பல தீர்மானங்கள் நிறைவேறின.

உரிகம் ஈ. டி. பிள்ளைத் தமிழர் இலவசப் பாடசாலையாரால் அண்ணாதுரை பந்தலில் 19-8-45-ல் வெற்றி விழாக் கொண்டாடப்பட்டது. தோழர் அந்தோனிசாமி அவர்களால் அரசர் படம் திறந்துவைக்கப்பட்டது. பிறகு தோழர் சின்னதுரை முன்மொழிய தோழர் சாமிவேல் தலைமை தாங்க, தோழர்கள் சா. மு. அப்பாசன், இராசகோபாலன் பேசினர். தோழர் குப்புசாமி, கே. ஜி. துரைராசன் சீர்திருத்த கலாட்சேபம் செய்தார்.

## திராவிடர் கழக ஆண்டு விழா வேலூர் (சேலம்)

திராவிடர் கழக ஆண்டு விழாவை முன்னிட்டு 26-ம் தேதி காலை மேளவாத்தியத்தோடு ஊரின் முக்கியத் தெருக்களின் வழியாக "திராவிட நாடு திராவிடருக்கே" "பெரியார் வாழ்க" என்ற வாழ்த்தொலி வானமுட்ட திராவிடர் கழகக் கட்டிடத்தில் ஊர்வலம் வந்து முடிந்தது.

விழாவுக்கு உள்ளூர், வெளியூர் பிரபலஸ்தர்கள் சுமார் 500 பேர் வந்திருந்தனர். விழாவுக்கென்றே தனிப்பந்தல் அமைக்கப்பட்டிருந்தது.

பேருந்துறைச்சி மிட்டாதார் தோழர் சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் காலை 10-30 மணிக்கு விழா தொடங்கியது.

முதலில் தோழர் ஏ. பி. ஜனார்த்தனம் அவர்கள் திராவிடர் கழக நோக்கத்தைக் குறித்துச் சொற்பொழிவாற்றினார்.

அதன் பின் இராசிபுரம் தோழர் கே. வி. கே. இராமசாமி அவர்கள் பேசினார்கள்.

பிறகு பெரியாரவர்கள் சுமார் 1½ மணி நேரம் திராவிடர் அடைந்துள்ள இழிநிலை, 'திராவிடர்' என்ற பெயர் பொருத்தம், கடவுள் கொள்கை, சீர்திருத்தம் ஆகியவை பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

தோழர் இரா. நல்லடி நன்றி கூற ஆண்டுவிழா முடிந்தது. மழை காரணமாக மாலை கூட்டம் நடைபெறவில்லை.

---

Edited, Printed, and Published by N. Kariyaradaswamy at the Tamilian Press 42 Cutchery street, Erode.